www.tamilarangam.net

# உலகஅகதிகள்முகாமில்காணாதபரிதாபநிலையை கிழக்கிலங்கையில் கண்டேன்!

## பிரித்தானிய "நியூஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை வெளிநாட்டு ஆசிரியர் கருத்து!

லண்டன், பெப். 15

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் பாதிக்கப்பட்டவருக்கு நிதி சேகரிக்கும் முகமாக மத்திய லண்டனில் கனோட் அவையில் ஒழுங்குசெய்யப்பட்ட இராப்போசன நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தனது நேரடி அனுபவங்களை விளக்கிய பிரித்தானிய சோஷலிச இயக்கக் குரலான "நியூஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையின் வெளிநாட்டுச் செய்தி ஆசிரியர் கிறிஸ்தோபர் ஹிச்சின்ஸ் "உலக அகதிகள் முகாம்களில் காணாத பரிதாப நிலையை, கிழக்கிலங்கையில் கண்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் கார்டியன் பத்திரிகை நிறுவனத்தின் பிரதிநிதி மாட்டின் வாக்கர், கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பொப எட்வேட், ஸ்டன்நியூவென்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

"வியட்நாமிலும், மத்திய கிழக்கிலும் சைப்பிரசிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள அகதி முகாம்களிலெல்லாம் காணாதபரிதாபகரமான நிலையிலுள்ள மக்களைக் கிழக்கிலங்கையில் கண்டேன். தார்மீக அரசாங்கமென்று தன்னைப் புகழ்ந்துகொள்ளும் ஜே. ஆர் அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கடைப்பிடிக்கும் கொள்கையை என்னால் புரிந்துகொள்ள முடியாத விநோதமாக உள்ளது. சுவிற்சர்லாந்து அரசாங்கம் ஒருவிமானத்தில் பால்மா புட்டிகளை நிறைத்து அனுப்பியிருந்தும் அவை எதுவும் கிழக்கிலங்கையிலே வழங்கப்படவில்லை. கொழும்புத் தெருவோரங்களில் கள்ள விலைக்கு அவை விற்கப்படுகின்றன. பதினாறாயிரம் கூடாரங்களை வெளிநாட்டு அரசாங்கங்கள் அகதிகளுக்கு வழங்கியிருந்தும் என்னால் 12 கூடாரங்களேனும் மட்டக்களப்பில் பார்க்க முடியவில்லை" என்று கிறிஸ்தோபர் குறிப்பிட்டார்.

வரவேற்புரை நிகழ்த்திய இலங்கை பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் விரிவுரையாளர் கலாநிதி நித்தியானந்தன்; அவலப்பட்டுள்ள அகதிகளுக்கு ஆதரவளிக்குமாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

"அடுத்துப்பேசிய "ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியின் நிறுவனமாகிய ஸ்பெக்ரேன் பிரதிநிதி டோனி கில்பர்ட்; தொழிற்கட்சியிலே இடதுசாரி இயக்கங்களினதும் தொழிலாளர் இயக்கத்தினதும் ஆதரவைத் திரட்டுவதாக உறுதியளித்து, ஒரு தலைமுறையாக 'சிறுபான்மையினர்' என்ற காரணத்தினாலே படிப்படியாக தமது அடிப்படை உரிமைகளையும் நிலங்களையும் சொத்துடைமைகளையும் பறிகொடுத்து வந்த அப்பாவி மக்கள் இயற்கையினாலும் வஞ்சிக்கப்பட்டமை மிகவும் பரிதாபத்திற்குரியது" என்று குறிப்பிட்டார். முடிவில் பேராசிரியர் ஆறுமுகம் நன்றிநவில்கையில் ஈழத்தமிழர் ஓராண்டுக்குள் இரு தடவைகள் அகதிகளாயினர் என்று குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்